எம்.சி.ஓ.பி. எண்: 2811/2023 தேதி : 18.6.2024

ம.சா. : 1

பெயர் : திரு. விக்ரம் S வைத்யா

த/பெ. : திரு. ஸ்ரீராம்

வயது : 41

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 21 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மனைவி தலைக்கவசம் அணியாமல் சென்றதால் தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது மனைவி சென்ற இருசக்கர வாகன ஓட்டியின் அஜாக்கிரதையும் விபத்திற்கு காரணம் என்பதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மறுமணம் செய்யவில்லை. நான் மறுமணம் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. எனது மனைவியின் அம்மா உயிருடன் இருக்கிறார். எனது மனைவியின் அம்மா வாரிசு என்பதால் அவரை வழக்கில் சேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மசாஆ 13 லிருந்து 15 வரையிலான ஆவணங்கள் எனது மனைவி வேலை செய்த நிறுவனத்தில் உள்ளவர்களை விசாரித்தால் தான் உண்மைத்தன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. எனது மனைவியின் கல்வித்தகுதி குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் 10-ம் வகுப்பு சான்றாவணம் தாக்கல் செய்துள்ளேன், மற்றவை தாக்கல் செய்யவில்லை. மசாஆ 21-ஆன ஆவணத்தை வழங்கியவரை அழைத்து விசாரித்தால் தான் உண்மைத்தன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. எனது மனைவி எப்பொழுது வேலையில் சேர்ந்தார் என்ற விவரங்களை அவர் வேலை செய்த நிறுவத்தில் உள்ளவர்களை விசாரித்தால் தான் தெரிய வரும் என்றால் சரியல்ல. மசாஆ 21-ஆன ஆவணம் இழப்பீடு பெறுவதற்கான முழுமையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மசாஆ 3-ஆன மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையில் ஸ்ரீ ராம் காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டாளர் என்று காண்ப்படுகிறது என்றால் சரிதான். ஸ்ரீ ராம் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காத

காரணத்தால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.